

பாடம் 3 ஏப்ரல் 13-19

# இருளில் ஒளி பிரகாசிக்கிறது

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 8:44; ஆதி 23:23; அப் 20:27–32; 2தெச 2:7–12; சங் 119:105, 116, 130, 133, 160; ஆதி 16:25; 2கொரி 4:3–6.

**மனன வசனம்:** அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான் (என்று சொன்னார்). யோவான் 12:35.

வேதாகமத்தின் கடைசிப்புத்தகமான வெளிப்படுத்தலில் பிசாசானது பழைய பாம்பு என்றும், வலுசர்ப்பம் என்றும் அழைக்கப்படுகிறது. வெளி 12:9. தேவமக்களை அழிப்பதால் வலுசர்ப்பம் என்றும், அவர்களை வஞ்சிப்பதற்கு தந்திரமான சகலவித பொய்களையும் பயன்படுத்துவதால் பழைய பாம்பு என்றும் அழைக்கப்படுகிறான். கிறிஸ்து மரித்தபிறகு, ஆயிரக்கணக்கானோர் சித்திரவதை செய்யப்பட்டார்கள்; சிங்கங்களிடம் எறியப்பட்டார்கள்; தன் கடவுள்களை வணங்காத காரணத்திற்காக சர்வாதிகார ரோமால் எரிகம்பங்களில் எரிக்கப்பட்டார்கள். கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டாலும், அநேகர் உண்மையாக இருந்தார்கள்; சுவிசேஷம் தொடர்ந்து பரவியது; திருச்சபை வளர்ந்தது.

அதன் விளைவாக, சாத்தான் தன் வியூகத்தை மாற்றினான். வேதாகம சத்தியத்தின் போதனையை அறியாமலேயே ஆயிரக்கணக்கான அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் பெறும்படி செய்தான். தலைவர்கள் வேதாகம சத்தியத்தோடு உலகக் கருத்துகளையும் கலந்ததால், திருச்சபைக்குள் பொய்கள் அலைபோல பெருகின. 4ம் 5ம் நூற்றாண்டுகள் சமரசத்தின் காலக்கட்டங்களாக இருந்தன; அப்போது சபையின் முக்கியஸ்தர்கள் அஞ்ஞான பழக்கவழக்கங்களை கிறிஸ்தவப் போதனைகளுடன் கலந்தார்கள்.

ஆனாலும், வாழ்க்கையின் மிகவும் கடினமான காலக்கட்டங்களிலும், தேவன் தம் மக்களோடு இருந்தார். 'வழியும் சத்தியமும் ஜீவனுமான இயேசுவை பலர் கண்டுகொண்டார்கள்; தாங்கள் மனதார நம்பினவற்றை மறுக்கும்படி அதிகப்படியான அழுத்தம் ஏற்பட்டபோதிலும், பரிசுத்த ஆவியின் வல்லமையால் தங்கள் நம்பிக்கையில் உறுதியாக நின்றார்கள். வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவ சித்தத்திற்கு உண்மையாக இருந்தார்கள்; பகிரங்கமாகவோ சூழ்ச்சியாகவோ அழுத்தம் வைக்கப்பட்டாலும், அவரது வார்த்தையின் சத்தியத்திலிருந்து அவர்கள் விலகவில்லை.

***மாபெரும் போராட்டம், 3ம் அதிகாரத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, ஏப்ரல் 20 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# சமரச இணக்கம்: சாத்தானின் வஞ்சக வியூகம்

**யோவான் 14:6ஐ யோவான் 8:44 உடன் ஒப்பிடவும். இந்த இரண்டு வசனங்களிலும் இயேசுவின் குணத்திற்கும், சாத்தானுடைய குணத்திற்கும் இடையே காணப்படுகிற வித்தியாசம் என்ன?**

இயேசு சத்தியத்தின் ஆதாரமாக இருப்பதால், அவர் சொல்வது உண்மை. சத்தியமானது சர்வ ஞானமும் சர்வ அன்பும் சர்வ அறிவும் நிறைந்த தேவனுடைய இருதயத்திலிருந்து புறப்படுகிறது. நிஜத்திற்கும் சகல சத்தியத்திற்கும் இயேசுவே அஸ்திபாரம்.

ஆனால் சாத்தானோ பொய்யன்; பொய்களின் பிதா. தேவ மக்களை வழிவிலக்குவதற்காக பொய்களையும் வஞ்சகத்தையும் தவறான தகவல்களையும் திரிக்கப்பட்ட சத்தியத்தையும் பயன்படுத்துகிறான். ஏதேனில் சத்தியத்தைத் திரித்தான்; சந்தேகத்தை உருவாக்கினான்; தேவன் சொன்னதை முற்றிலும் மறுத்துப் பேசினான். இவ்வாறு ஏவாளை வஞ்சித்தான். அந்தக் கனியைப் புசித்தால் ‘‘நீங்கள் சாகவே சாவதில்லை’’ என்று சாத்தான் சொன்னது, தேவன் சொன்னதிற்கு முற்றிலும் முரணாக இருந்தது. நூற்றாண்டுகள் நெடுகிலும் இந்த வியூகத்தையே சாத்தான் பயன்படுத்திவருகிறான். தேவ வார்த்தைமீதான நம்பிக்கையைக் குறைத்து, வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவ சித்தத்தைப் புரட்டி, வேதவாக்கியங்களைத் திரித்து, அவ்வப்போது தன் நலனுக்காக வேதாகமத்தை தவறாக மேற்கோள் காட்டிவருகிறான்.

**தேவ வார்த்தையின் சத்தியம்பற்றி நீதி 23:23; யோவான் 17:17; 8:32 ஆகிய வசனங்களில் உள்ள பொதுவான கருத்து என்ன? அவற்றின் மையச் செய்தி என்ன?**

‘மனிதர்கள் பரிசுத்த வேதவாக்கியங்களை அறிவது, தனது வஞ்சனைகளை அறியவும், தனது வல்லமைக்கு எதிர்த்து நிற்கவும் அவர்களுக்குத் திறனளிக்கக்கூடும் என்பதை சாத்தான் நன்றாக அறிந்திருந்தான். உலக மீட்பருங்கூட வேதவாக்கியங்களால்தான் அவனது தாக்குதலை முறியடித்தார். ஒவ்வொரு தாக்குதலின்போதும், ‘என்று எழுதியிருக்கிறதே’ என்று வேதவசனத்தைச் சொல்லி, நித்திய சத்தியமாகிய கேடயத்தை கிறிஸ்து பயன்படுத்தினார். சத்துருவின் ஒவ்வொரு ஆலோசனையையும் வேதவாக்கியத்தின் ஞானத்தாலும் வல்லமையாலும் எதிர்த்தார். மனிதர்மேல் சாத்தான் தனது ஆதிக்கத்தைத் தக்கவைக்கவும், போப்பியத்தின் கள்ள அதிகாரத்தை நிறுவவும் மனிதர்களுக்கு வேதாகம அறிவு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. ‘‘வேதாகமம் தேவனை உயர்த்தி, மனிதர்களை அவர்களது உண்மையான நிலையை உணரச்செய்கிறது; எனவே, அதன் பரிசுத்த சத்தியங்களை மறைப்பதும், நசுக்குவதும் அவசியம்’’ எனும் நியதியை ரோமச்சபை கையாண்டது. வேதாகமப் புழக்கத்தை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தடைசெய்தார்கள். மக்கள் அதை வாசிப்பதையும், அதைத் தங்கள் வீடுகளில் வைத்திருப்பதையும் தடுத்தார்கள். நேர்மையற்ற குருமார்களும் உபதேசிமார்களும், தங்களுடைய பாசாங்குகளைத் தக்கவைக்கிற விதத்தில், வசனங்களுக்கு விளக்கம்கொடுத்தார்கள். இவ்வாறாக, போப் பூமியில் தேவனுக்குப் பதிலாளி என்றும், சபைமேலும் அரசாங்கத்தின்மேலும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் கிட்டத்தட்ட உலகம் அனைத்துமே ஒப்புக்கொள்ளும் நிலை உண்டானது.

**இன்று எந்தெந்த வழிகளில் தேவனுடைய வார்த்தையைப் புரட்ட, அதாவது, தவறாகச் சித்திரிக்க சாத்தான் முயலுகிறான்?**

# கொடிதான ஓநாய்கள்

**வரவிருந்த தேவதுரோகம்பற்றி எபேசுவின் சபைத் தலைவர்களுக்கு பவுல் கொடுத்த எச்சரிப்பு என்ன? அப் 20:27-32.**

---

வரவிருந்த தீங்குகுறித்து எச்சரிப்பதற்காக பவுல் இந்த ஆலோசனையை வழங்குகிறார். தன்னை அதிகம் கலங்கச்செய்த விஷயங்களை இந்த வசனங்களில் கூறுகிறார்.

'மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்' என்று கலங்கினார். அப் 20:29. விசுவாசிகள் கடும் உபத்திரவத்தை சபைக்குள்ளிருந்தே அனுபவிக்க இருந்தார்கள்.

'உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்' என்பதிலும் அவரது கலக்கம் புரிகிறது. அப் 20:30. மதப்புரட்டுகள் திருச்சபைக்குள் நுழையவிருந்தன. தெய்வீக சத்தியங்களுக்குப்பதிலாக பொய்க் கோட்பாடுகள் புகுத்தப்படவிருந்தன. அஞ்ஞான பழக்கவழக்கங்கள் விசுவாசிகளை மேற்கொள்ள இருந்தன. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில், சமரசப் போக்கு கிறிஸ்தவத் திருச்சபைக்குள் வஞ்சகமாக நுழைந்தது; ஊழியம் வளரவேண்டும் என்பதை சாக்குப்போக்காகச் சொல்லி அதைச் செய்திருக்கலாம். அதனால் தேவவார்த்தையின் சத்தியங்களிலிருந்து வழிவிலகுகிற கொடுமையான நிலை உண்டானது.

**வரவிருந்த தேவதுரோகம்பற்றி 2தெச 2:7-12இல் பவுல் எவ்வாறு விவரிக்கிறார்? அதன் என்னென்ன தன்மைகளை விசுவாசிகள் எதிர்பார்க்கலாம்?**

'அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது' என்று பவுல் சொல்லுகிறார். பவுலின் நாட்களிலும்கூட, தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில், தேவ வார்த்தையின் சத்தியத்திலிருந்து படிப்படியாக விலகுகிற போக்கு காணப்பட்டது. இந்தப் பின்வாங்கல் பின்வரும் நூற்றாண்டுகளில் அதிகரிக்கவிருந்தது.

இரண்டாவது கற்பனைக்கு முரணாக, கிறிஸ்தவத் தொழுகைக்குள் சிலை வணக்கம் புகுத்தப்பட்டது. சிலை வணக்கமானது, அஞ்ஞானிகளின் தொழுகைகளில்தான் ஆயிரக்கணக்கான வருடங்களாக இருந்து வருகிறது. அஞ்ஞான மார்க்கத்தாரை கிறிஸ்தவ சபைக்குள் வரவைப்பதற்கு ஏதுவாக கிறிஸ்தவ மார்க்கத்தைக் கவர்ச்சிகரமாக மாற்றும்படி, அஞ்ஞான கடவுள்களின் பெயர்களை மாற்றி, புனிதர்கள் என்று அழைத்தார்கள். சூரியக்கடவுளின் தொழுகை நாளான ஞாயிற்றுக்கிழமையை, உயிர்த்தெழுதலுக்கு கனத்தைக் கொடுக்கும்படி, கிறிஸ்தவத் தொழுகையின் நாளாக படிப்படியாக மாற்றினார்கள். வேதாகமம் அங்கீகரியாத இந்தப் பொய் நாளானது, இன்றும் நடைமுறையில் இருந்துவருகிறது.

---

**இன்று திருச்சபைக்குள் எப்படிப்பட்ட சமரசப்போக்குகள் நுழைந்துவருகின்றன? முக்கியமாக, நீங்கள் என்ன சமரசங்களைச் செய்து வருகிறீர்கள்? சத்தியத்தோடு பொய்யைக் கலப்பதும் அதில் காணப்படுகிறதா?**

## வார்த்தையால் பாதுகாப்பு

**யோவான் 17:15-17ஐ அப் 20:32 உடன் ஒப்பிடுங்கள். சாத்தானின் வஞ்சகங்களிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு இயேசுவும் பவுலும் சொல்லுவது என்ன?**

வேதாகமம் பிழையில்லாத தேவசித்தத்தின் வெளிப்பாடாகும். அது மனுக்குலத்தின் இரட்சிப்புக்கான பரலோகத்திட்டத்தைச் சொல்கிறது. 'வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது' என்பதால், 'அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'. 2தீமோ 3:16. அதாவது 'வேதவாக்கியங்களெல்லாம்' தேவனுடைய ஏவுதலால் எழுதப்பட்டவை; சில பகுதிகள் மட்டுமே அவ்வாறு எழுதப்பட்டதாகச் சொல்வது பொய். வேதாகமம் முழுவதையும் தேவ வார்த்தையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், அது வஞ்சகத்திற்குள் வழி திறந்துவிடும்.

மாபெரும் போராட்டத்தின் வெளிச்சத்தில், தேவனுடைய அளவற்ற அன்பை வேதாகமம் தெளிவாக வெளிப்படுத்துகிறது. அது சாத்தானுடைய மருட்சிகளை வெளியரங்கமாக்கி, பிசாசின் வஞ்சகங்களை வெளிப்படுத்துகிறது. சாத்தான் தேவவார்த்தையை வெறுக்கிறான்; அதன் செல்வாக்கை அழிப்பதற்கு நூற்றாண்டுகள் நெடுகிலும் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கிறான்.

வேதாகமம் இல்லாமல் இரட்சிப்பின் திட்டம்பற்றி ஏதாவது அறியமுடியுமா? இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, போதனைகள், ஊழியம்பற்றி எவ்வளவுக்கு அறிந்துகொள்ள முடியும்? வேதவாக்கியங்கள் இல்லாமல், கிறிஸ்துவுடைய தியாகத்தின் ஆழம், உயிரத்தெழுதலின் மகிமை, பரிந்துபேசுதலின் வல்லமை, வருகையின் மாட்சிமைபற்றி கொஞ்சமாவது புரிந்துகொள்ள முடியுமா?

தேவ வார்த்தைதாம் இந்தச் சத்தியங்கள் அனைத்தையும் வெளிப்படுத்துகிறது; போதிக்கிறது; வலியுறுத்துகிறது. அது மட்டுமே பரிசுத்த சத்தியம் முழுவதையும் புரிந்துகொள்வதற்கான இறுதி அளவுகோலாக இருக்கவேண்டும்.

எனவே, அதன் அதிகாரம் அல்லது ஆவியின் ஏவுதலைக் குறைத்துக்காட்டுகிற முயற்சிக்கு எதிராக நாம் போராடவேண்டும்; அதாவது அதை நேசிப்பதாகச் சொல்லிக்கொண்டே, இரகசியமாக அதன்மேல் சந்தேகப்பார்வையை வீசச்செய்கிறவர்களின் முயற்சிகளுக்கு எதிராக நாம் போராடவேண்டும். இன்றைய நவீனசிந்தனைப்போக்கால், பலஇறையியல்வல்லுனர்களும்கிறிஸ்தவர்களும் வேதவாக்கியங்கள்குறித்த மனித கருத்துகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதால், வேதாகமம் தேவ வார்த்தையாக அல்லாமல் மனித வார்த்தையாக மாறி வருகிறது. ராஜாக்கள், மேய்ப்பர்கள், மீனவர்கள், ஆசாரியர்கள், கவிஞர்கள் போன்ற பலர் எழுதினார்கள்; தாங்கள் வாழ்ந்த காலத்திலும் இடத்திலும் தங்களுடைய மிகச்சிறந்த புரிதலின் அடிப்படையில் எழுதினார்கள்; தேவன், அவருடைய படைப்பு, எதார்த்தம்பற்றி எழுதினார்கள்.

இது உண்மை என்றால், இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்கிற நாம், இந்த நபர்களின் புரிதல்களைப்பற்றி ஏன் அக்கறை காட்டவேண்டும்? நித்திய வாழ்வுக்கான நம்பிக்கையின் அஸ்திபாரமென அவர்கள் நினைத்த விஷயங்களில் நாம் ஏன் சிரத்தை எடுக்கவேண்டும்?

---

**இரட்சிப்பின் திட்டத்தில் தேவவார்த்தையின் முக்கியத்துவம்பற்றி சங்கீதக்காரன் சுட்டிக்காட்டுவது என்ன? சங் 119:105, 116, 130, 133, 160.**

# வேதாகமத்திற்கு அப்பாற்பட்ட மனித பகுத்தறிவு

ஆவியானவர் நம் சிந்தைகள்மூலம் கிரியை செய்கிறார். பிரபஞ்சத்தின் இரகசியங்களை ஆராயுமாறு நம்மை அழைக்கிறார். 'கிறிஸ்தவர்கள் ஆலயத்தின் வாசலில் காலெடுத்து வைக்கும்போது மூளையைப் பயன்படுத்துவதில்லை' என்பார்கள். இருந்தாலும், மனித பகுத்தறிவின் திறமையை வைத்துமட்டுமே வேதாகமத்திலுள்ள தெய்வீக சத்தியங்களைக் கண்டிபிடித்துவிட முடியாது. சத்தியம் என்பது மனித தேர்வு சம்பந்தப்பட்ட விஷயமல்ல. அது தெய்வீக வெளிப்பாடு சம்பந்தப்பட்டது.

**வஞ்சிப்பதற்கு சாத்தான் பயன்படுத்துகிற வியூகம்பற்றி நீதி 16:25; நியா 21:25; ஏசாயா 53:6 வெளிப்படுத்துவது என்ன?**

'தேவ சித்தத்தைப் புரிந்துகொள்ள, பரிசுத்த ஆவியின் உதவி தேவையில்லை; வேதாகமத் தகவல்கள் தேவலையில்லை; மனித பகுத்தறிவு போதுமானது' என்று நம்மை நம்பவைப்பதுதான் பிசாசின் ஆற்றல்மிக்க வஞ்சகங்களில் ஒன்றாகும். நம் பார்வைக்கு, ஒட்டுமொத்த கலாச்சாரத்துக்கும் செம்மையாகத் தோன்றுகிற வழிகள் உண்டு; ஆனால் அவை தேவனுடைய பார்வைக்கு முற்றிலும் தவறானவைகளாக இருக்கலாம்.

சில வருடங்களுக்குமுன், நானும் என் மனைவியும் இரவில் ஒரு உணவகத்தில் தங்கியிருந்தோம்; அப்போது, பக்கத்திலிருந்த காட்டிற்கு மலையேறுவதற்காகச் சென்றோம். என்னால் திசைகளை எளிதில் ஞாபகத்தில் வைக்கமுடியும்; எனவே, பல்வேறு வழிகளில் நடந்துசென்றாலும், மீண்டும் பத்திரமாகத் திரும்பிவிட முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருந்தது. ஆனால் சீக்கிரமே காட்டில் வழிதவறிவிட்டோம். சூரியன் மறைந்துகொண்டிருந்தது; திகிலடைந்தோம். நல்லவேளையாக, வழிதெரிந்த சிலர் அங்கே வந்தார்கள். செல்லவேண்டிய இடத்திலிருந்து ஐந்து மைல் தள்ளி வந்திருந்தோம்; ஆனால் ஒரு பிரதான சாலைக்கு அருகிலேயே இருந்தோம். அவர்கள் அங்கேபக்கத்திலேயே தங்கள் காரை நிறுத்தியிருந்ததால், எங்களை காரில் ஏற்றி, உணவகத்தில் கொண்டுபோய் விட்டார்கள். நாம் செல்லவேண்டிய இடத்திற்கு வழிதெரிந்த, அங்கே நம்மை அழைத்துச் செல்ல திறனுள்ள ஒருவரைக் கண்டுபிடிப்பது, மிகவும் முக்கியமான ஒன்று.

பூமியிலிருந்து பரலோகம்நோக்கிய பயணத்தில் தேவன் நம்மைத் தனியாக விடவில்லை. நம்மை வீட்டிற்கு அழைத்துச்செல்லுகிற வழியை ஆவியானவர் நமக்குக்காட்டுகிறார். சத்தியம்-பொய், சரி-தவறு, நன்மை-தீமை ஆகியவற்றை தேவவார்த்தையின் வெளிச்சத்தில்மட்டுமே சரியாகப் புரிந்துகொள்ள முடியும். தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் முரணானது தவறு; தவறு எப்போதுமே ஆபத்தானது; தேவனுக்கு இணக்கமாக இருத்தல் சத்தியமும் நன்மையுமாக இருக்கிறது. சத்தியத்திற்கும் ஒழுக்கத்திற்கும் இறுதிவழிகாட்டியாக தேவவார்த்தையை ஏற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியமானது!

**பரிசுத்த ஆவியின் உதவியின்றி மனித மனதால் தெய்வீக சத்தியத்தை ஏன் கண்டுபிடிக்க முடியாது? மனித பகுத்தறிவுக்கும் தெய்வீக வெளிப்பாட்டிற்கும் இடையேயுள்ள உறவுபற்றி விவாதியுங்கள். தெய்வீக வெளிப்பாட்டை நாம் புரிந்துகொள்ள பகுத்தறிதல் எவ்வாறு உதவுகிறது? உதாரணமாக, பாபிலோனின் காலம் முதல் இரண்டாம் வருகையின் காலம் வரையிலான உலக வரலாற்றைச் சொல்கிற தானியேல் 2ம் அதிகாரத்தில் தெய்வீக வெளிப்பாட்டைப் புரிந்தகொள்ள எவ்வாறு உதவுகிறது? இதுபோன்ற தீர்க்கதரிசனம் எவ்வாறு மனித பகுத்தறிவை ஈர்க்கிறது?**

# மனதிற்கான போராட்டம்

**2கொரி 4:3-6ஐ வாசிக்கவும். 'இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்' என்பதன் பொருள் என்ன? 2கொரி 4:4. அவர்களது கண்கள் எவ்வாறு குருடாக்கப்படுகின்றன? எவ்வாறு திறக்கப்படுகின்றன?**

---

இந்த வசனத்தில் வரும் 'மனது' என்பதற்கான கிரேக்க வார்த்தை **நோயிமா**. இதற்கு புலனுணர்வு அல்லது மனத்திறன்கள் என்று அர்த்தம். இந்த வசனம் பற்றி எஸ்டிஏ வேதாகம விளக்கவுரை ஒரு முக்கியக் கருத்தை முன்வைக்கிறது. 'கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையேயுள்ள யுத்தமானது மனிதர்களின் மனதிற்கான யுத்தம். ரோமர் 7:23, 25; 12:2; 2கொரி 3:14; 11:3; பிலி 2:5; 4:7,8. மனிதர்களுடைய மனதைக் குருடாக்குவது சாத்தானுடைய முக்கிய வேலை. அவர்களை தேவவார்த்தையை ஆராயவிடாமல் செய்து, சரீர-ஆத்தும துஷ்பிரயோகத்தால் மனத்திறன்களைச் சீர்கெடப்பண்ணி, இவ்வுலக வாழ்க்கையின் காரியங்களால் மனதை முழுவதும் நிரப்பி, அகந்தைக்கும் சுயமேன்மைக்கும் தீனிப்போட்டு இதைச் செய்கிறான்'.[1]

தொலைந்துபோனோர் தேவையான அறிவைப் பெறாமல் போனதற்கு அவர்களுடைய இயலாமை காரணமல்ல; அறிவைப்பெற விரும்பாததே காரணம். சத்தியத்தை அறிந்துகொள்கிற வாய்ப்பை அநேகர் பெற்றிருந்தாலும், அவர்கள் அதை நம்பத் தீர்மானிப்பதில்லை; சாத்தான் அவர்களுடைய கண்களைக் குருடாக்குகிறான். சாத்தானின் ராஜ்யம் இருளின் ராஜ்யமாகும். எஸ்டிஏ விளக்கவுரை இவ்வாறு சொல்கிறது: 'சாத்தானின் தீயதிட்டங்களையும் ஏமாற்று வேலைகளையும் அம்பலப்படுத்துவதற்கும், மனிதர்களுக்கு இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கிய வழியைக் காண்பதற்கும் சுவிசேஷம் மட்டுமே ஒரே வழி'. புதிய ஏற்பாட்டு செய்தியின் சாராம்சமே இயேசுவின் வாழ்க்கையும் மரணமும் உயிர்த்தெழுதலும்தான். இயேசுவே சுவிசேஷத்தின் மையம்; வேதாகமத்தின் மையம். வேதவாக்கியங்கள் அனைத்தும் அவரைப்பற்றிச் சாட்சியிடுகின்றன. யோவான் 5:36.

**யோவான் 1:4,5,9,14 இயேசுவை எவ்வாறு விவரிக்கின்றது? குறிப்பாக யோவான் 1:14ஐக் கவனியுங்கள்.**

---

கிறிஸ்தவத் திருச்சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில், கிறிஸ்துவே தங்களிலுள்ள இருளை அகற்றுகிற வெளிச்சமென புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் தங்களை அவருக்கு முற்றிலும் அர்ப்பணித்தார்கள். அவரது கிருபையால் மீட்கப்பட்டார்கள்; அவரது வல்லமையால் மாற்றப்பட்டார்கள்; அவரது அன்பால் ஊக்கமடைந்தார்கள். கிறிஸ்துவின் மீதிருந்த மெய்ப்பற்றை மரணத்தால்கூட கெடுக்க முடியவில்லை. சுவிசேஷத்தின் மகிமையான வெளிச்சத்தில் பிசாசின் வஞ்சகங்களை அடையாளம் கண்டார்கள். கிறிஸ்துவின் கிருபையால் அவரது சத்தியத்திற்கு தைரியமாக நின்ற ஆண்களும் பெண்களும் இருந்திருக்கிறார்கள். இந்த ஆரம்ப நூற்றாண்டுகளில், கிறிஸ்துவின் அன்பு, கிருபை, சத்தியம் ஆகியவற்றின் ஒளி இருளின் ஊடே பிரகாசிக்கிறது.

# மேலும் படிக்க:

‘சத்தியத்திற்கெதிரான வெறுப்பும் எதிர்ப்புமான இதே ஆவிதான், தேவனுடைய எதிரிகளை ஒவ்வொரு காலத்திலும் தூண்டியது; அவருடைய தாசர்களிடத்தில் இதேபோன்ற விழிப்பும் விசுவாசமும் தேவைப்படுகிறது. முதல் சீடர்களுக்கு இயேசு சொன்ன பின்வரும் வார்த்தைகள், அவருடைய கடைசிக்கால சீடர்களுக்கும் பொருந்தும். ‘நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்றார் மாற்கு 13:37’ என்கிற வார்த்தைகள் இன்று நமக்கும் உரியவை’.[1]

உலகின் பல பகுதிகளில், குறிப்பாக உலகத்தில் வேதாகமம் எளிதாகக் கிடைக்கிற இடங்களில், அதன் செல்வாக்கைப் பெலவீனப்படுத்துவதற்கு சாத்தான் வேறு வழிகளைப் பயன்படுத்தியிருக்கிறான். ‘பல்வேறு அறிவியல் முயற்சிகளை முன்னெடுப்பதும், வேதாகமப் புலமையை முக்கியப்படுத்துவதும்’ ஒரு முக்கிய வழி ஆகும். அந்தக் கருத்துகளை ஏற்றுக் கொண்டால் சில சமயங்களில் வேதாகமத்தின் மீதான நம்பிக்கையை அவை கெடுத்துவிடும். உதாரணமாக, தானியேல் புத்தகமானது கிறிஸ்துவுக்கு 500 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டாலும், சிலர் அது கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். ‘அந்தக் காலக்கட்டத்தில்தான் அது எழுதப்பட்டிருக்க வேண்டும்; இல்லையெனில், தீர்க்கதரிசியால் எதிர்காலத்தைச் சொல்லியிருக்க முடியாது’ என்று வாதிடுகிறார்கள். வேதாகமம் பற்றிய இந்தப் பொய் இன்றைய வியாக்கியானிகள் நம்மீது திணிக்கமுயலுகிற ஒரு கருத்து ஆகும். மேலும் வருத்தம் என்ன தெரியுமா? வேத அறிஞர்களே சொல்லுகிறார்கள் என்று அநேகர் இந்தப் பொய்யை ஏற்றுக்கொள்கிறார்கள். அதனால்தான் பவுல், ‘எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்’ என்கிறார். 2தெச 5:21.

[1] Ellen G. White, The Great Controversy, pp. 56, 57.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *செவ்வாய்க்கிழமை மேற்கோளை மனதில் வைத்து, இதைச் சிந்தியுங்கள்: வேத வாக்கியங்களின் அதிகாரத்தை இரகசியமாகக் குறைப்பதற்கு இதே பாணிகளை சாத்தான் எவ்வாறு இன்று பயன்படுத்துகிறான்?*

2. *தேவ வார்த்தையைப் புரட்டுவதற்கு எதிராக நமக்குள்ள மிகப்பெரிய பாதுகாப்பு என்ன?*

3. *நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டத்தில் சாத்தான் எடுக்கிற மிகப்பெரிய முயற்சி தேவகுணத்தைக் கெடுத்துப் பேசி, அவரை கொடுங்கோலராகவும் அன்பற்ற சர்வாதிகாரியாகவும் காட்டுவதே. சாத்தான் இதைச் செய்ய எவ்வாறு முயலுகிறான்? அவனுடைய பொய்களுக்கு தேவனுடைய எதிர்வினை என்ன?*

4. *‘எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது’ என்று பேதுரு உறுதியளிக்கிறார். 2பேதுரு 1:20. நம் கருத்துகளை நிரூபிப்பதற்கு வேதாகமத்தின் கருத்தைப் புரட்டாமலிருக்க என்ன செய்யலாம்? இவ்வாறு புரட்டுவது நாம் நினைப்பதைவிட ஏன் எளிது? இதற்கு எதிராக நம்மை எவ்வாறு பாதுகாக்கலாம்?*

# இத்தாலியில் உண்மையுள்ள மாணவி

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

இத்தாலியில், அரசு பள்ளிகளில், விருப்பமுள்ள மாணவர்கள் ஒரு மணி நேரம் மத சம்பந்தமான வகுப்புகளில் கலந்துகொள்ள அனுமதியுண்டு. சாரா என்கிற ஒரு சிறுமி, வேதாகமத்தைப் பற்றி அதிகம் அறிய விரும்பினதால், அந்த வகுப்பில் கலந்துகொண்டாள்.

அவளுக்கு வேதாகம விஷயங்கள் நன்கு புரிய ஆரம்பித்தன. எனவே ஆசிரியை ஏதாவது கேள்வி கேட்டால், "சாராவுக்கு பதில் தெரியும்" என்று மற்ற மாணவர்கள் சொல்லுவார்கள். இது மாதக்கணக்கில் தொடர்ந்தது. அதனால் ஆசிரியை ஒருநாள் சாராவிடம், "நீ எப்படி வேதாகமத்தை நன்கு அறிந்துகொண்டாய்?" என்று கேட்டார்.

"செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் கற்றுக்கொண்டேன்" என்று சொன்னாள். அதுபற்றி அறிந்துகொள்ள விரும்பின ஆசிரியை ஒருநாள், சாரவுடன் சேர்ந்து ஆலயத்திற்குச் சென்றார்.

சாரா ஆறாம் வகுப்பு படித்தபோது, மதவகுப்புகளுக்கு புதிதாக ஒரு ஆசிரியையை நியமித்தார்கள். அந்த ஆசிரியைக் கேட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தாள். அதனால் தாக்கமடைந்த ஆசிரியை, அட்வென்டிஸ்ட் சபை பற்றி ஒருமணி நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தார். அவள் பேசி முடிந்ததும், ஓய்வுநாள் பற்றி சகமாணவர்கள் அவளிடம் கேள்விகள் கேட்டார்கள். இன்று சாரா மேல்நிலைப் பள்ளியில் படித்து வருகிறாள். கன்னியாஸ்திரி ஒருவர்தான் பக்திவகுப்புக்கான ஆசிரியை. ஒருசமயம், ஒரு தேர்வின்போது சாரா எழுதியிருந்த ஒரு வசனம் அந்தக் கன்னியாஸ்திரியை மிகவும் கவர்ந்தது. அதுபற்றி சாராவிடம் விளக்கம் கேட்டார். சாரா தன் விசுவாசம் பற்றிச் சொன்னாள். அதன்பிறகு அந்தக் கன்னியாஸ்திரி ஆலயத்திற்கு வந்தார்.

இன்னொரு வகுப்பில், இத்தாலியில் உள்ள ஒரு மதம்பற்றி சாராவால் பதிலளிக்க முடியாதபோது ஆசிரியை விரக்கியடைந்தார். இத்தாலியின் மிகப்பெரிய மதத்தில் தான் அங்கத்தினராக இல்லாததால் தனக்கு தெரியவில்லை என்று சாரா சொன்னாள். அந்த ஆசிரியை பல கேள்விகள் கேட்டுவிட்டு, வகுப்பில் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபைபற்றி ஒரு பாடம் எடுக்கச் சொன்னார். சாராவின் விளக்கின விதம் ஆசிரியைக்குப் பிடித்திருந்தது; "நம் வகுப்பில் வேறொரு மதம்பற்றிக் கற்றுக்கொள்வது அருமையாக இருக்கிறது" என்று சொன்னார். ஆனாலும் அடுத்த வருடத்தில், அதே ஆசிரியையின் வகுப்பு ஒரு சனிக்கிழமையில் வந்தது. சாரா கண்டிப்பாக வகுப்புக்கு வர வேண்டுமென ஆசிரியை சொன்னார். அவள் செல்லவில்லை; எனவே, "தயவுசெய்து, பள்ளிக்கு வந்துவிடு, நீ வந்ததாக யாரிடமும் சொல்ல மாட்டோம்" என்று பசப்பினார். இவ்வாறு வாராவாரம் நக்கலடித்தார். "நானும் வீட்டில் இருந்துவிடலாமென நினைக்கிறேன். பள்ளிக்கு வந்து என்ன செய்வது?" என்று கேலியடித்தார்.

ஆனால் சாராவுடன் படித்த மாணவர்கள் அவளுக்கு ஆதரவாகப் பேசினார்கள்.

பிறகு ஓர் ஓய்வுநாளன்று, சாரா ஆலயத்தில் இருந்தபோது, அந்த ஆசிரியை அவளை வகுப்பில் புகழ்ந்துபேசினார். "சாரா இங்கு பாதிநேரம் தான் இருக்கிறாள், ஆனால் உங்களைவிட நல்ல மதிப்பெண் எடுக்கிறாள்" என்று சொன்னார். தன்னுடைய விசுவாசத்தை தான் வெளிப்படையாக அறிக்கையிடுவதால் தேவன் தன்னை ஆசீர்வதித்திருப்பதாக சாரா நம்புகிறாள்.